தமிழக சட்டப் பேரவை.

திங்கட்கிழமை, 1968 ஆகஸ்ட் 19.

———

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் **மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்**, புலவர் கா. கோவிந்தன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

திரு. டி. வேலுச்சாமி, முன்னாள் உறுப்பினர்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : 1957-ல் இருந்து 1959-வது ஆண்டு வரை ஆலங்குளம் தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ்நாடு சட்டப் பேரவை முன்னாள் உறுப்பினரான திரு. டி. வேலுச்சாமி அவர்கள் 10—8—1968 அன்று மறைந்துவிட்டதைக் குறித்து, இப்பேரவையின் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவிக்கிறேன்.

அன்னாருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லோரும் எழுந்து, ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(பேரவையில் எல்லோரும் எழுந்து ஒரு நிமிடம் மவுனமாக நின்றார்கள்.)

2. வினாக்கள்-விடைகள்

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்

Repayment to Reserve Bank

* 21 *Q.*—THIRU N. KASIRAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether it is a fact that there was a demand from the Reserve Bank of India in the first part of March 1967, for repayment of overdraft to the tune of Rs. 3 crores;

(*b*) whether it is a fact that a sum of Rs. 3 crores was received from the Central Government in February–March 1967; and

(*c*) if so, the date on which the said amount was received?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : பொது நலனை முன்னிட்டு இவ் விவரங்களை வெளியிடுவது உகந்ததல்ல என அரசாங்கம் கருதுகிறது.